## 3

# இயேசு, பழைய ஏற்பாடு மற்றும் நீங்கள்

## (மத்தேயு 5:17-20)

மலைப் பிரசங்கத்தின் புதியதொரு பகுதிக்கு நாம் வந்துள்ளோம் (5:17-48). பாக்கியங்களின் பகுதியில் (5:3-12), படர்க்கைப் பெயர்ச்சொல்[1] மேலாதிக்கம் கொண்டிருந்தது: ''ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் *அவர்களுடையது*'' (வசனம் 3; என்னால் வலியுறுத்தப்படுகிறது). எட்டாவது பாக்கியத்தை இயேசு விரிவாக்கியபோது, அவர் *முன்னிலைப் பெயர்ச்சொல்லு*க்கு மாறினார்: "என்னிமித்தம் *உங்களை* நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் *உங்கள்பேரில்* பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்*களாயிருப்பீர்கள்*" (வசனம் 11; என்னால் வலியுறுத்தப்படுகிறது). முன்னிலைப் பெயர்ச்சொல், செல்வாக்கின் மீதான பகுதி முழுவதிலும் தொடர்ந்தது (வசனங்கள் 13-16): "*நீங்கள்* பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்"; "*நீங்கள்* உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" (வசனங்கள் 13அ, 14அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மூன்றாவது பகுதியில் (வசனங்கள் 17-48) முன்னிலைப் பெயர்ச்சொல் ("நீங்கள்") தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது, ஆனால் *தன்மைப் பெயர்ச்சொல்* ("நான்") என்பதன் மீது வலியுறுத்தம் உள்ளது. இதன் திறப்புக்கூறை வாசியுங்கள் (வசனங்கள் 17-20), அதில் "நான்" என்ற வார்த்தை எவ்வளவு அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது என்பதைக் காணுங்கள்: "வந்தேன்," "அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்," "உங்களுக்குச் சொல்லுகிறேன்," மற்றும் இன்னொரு "உங்களுக்குச் சொல்லுகிறேன்."

மோசேயின் நியாயப்பிரமாணத்துடன் இயேசுவுக்குள்ள உறவு (மற்றும் மோசேயின் நியாயப்பிரமாணத்தை யூதர்கள் தவறாகப் பயன்படுத்துதல்) என்பதே மத்தேயு 5:17-48 வசனப் பகுதியின் கீழ் மறைந்திருக்கும் ஆய்வுக்கருத்தாக உள்ளது. இந்த வசனப்பகுதி ஒரு அறிமுகக் கூறுடன் தொடங்கி (வசனங்கள் 17-20), அதைத் தொடர்ந்து, அறிமுகத்தில் விளக்கப்படுத்தப்பட்ட கொள்கைகளுக்கான, ஐந்து அல்லது ஆறு விவரிப்புகள்[2] அல்லது உதாரணங்களைக் கூறுவதாக உள்ளது. இந்தப் பாடத்தில் நாம், திறவு வார்த்தைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போம். தொடர்ந்து வரும் பாடங்களில் நாம், உதாரணங்களைப் படிப்போம்.

# தேவனுடைய வசனத்தை இயேசு மதித்தார் (5:17, 18)

### வசனம் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்தது (வசனம் 17)

நமது வேதபாட வசனப் பகுதியானது, "நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்" என்று இயேசு கூறியதுடன் தொடங்குகிறது (வசனம் 17அ). "நியாயப்பிரமாணம்" மற்றும் "தீர்க்கதரிசனங்கள்" என்பவை, பழைய ஏற்பாடு என்று நாம் அழைக்கும் யூதத்துவதத்தின் இருபிரிவுகளாக இருந்தன.[3] இவ்விரு சொற்றொடர்களும் சிலவேளைகளில் பழைய ஏற்பாடு முழுவதையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன (பின்வருபவற்றை ஒப்பிட்டுப் பார்க்கவும்:மத்தேயு 7:12; 11:13; 22:40; யோவான் 1:45; நடபடிகள் 24:14; 28:23), மற்றும் இங்கு இவைகள் இவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளன. "அழிக்கிறதற்கு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*kataluo* என்ற[4]) வார்த்தை, "நீக்குதல்," "செல்லாததாக்குதல்" மற்றும் "மதிப்பற்றதாக்குதல்" என்பவை உட்படப் பலவகையான சாத்தியக்கூறுள்ள அர்த்தங்களைக் கொண்டுள்ளது. KJV வேதாகமத்தில் "destroy" என்றுள்ளது.[5]

இயேசு நியாயப்பிரமாணத்தையோ அல்லது தீர்க்கதரிசனத்தையோ அழிக்கிறதற்கு வரவில்லை என்று கூறுவது அவசியம் என்று ஏன் நினைத்தார்? அவர் ஒரு *பொதுவான* நோக்கத்தைக் கொண்டிருக்கலாம். இயேசுவைப் பற்றிய விமர்சனம் ஏற்கனவே பரவியிருந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. இயேசுவுக்கும் யூதத்துவ மதத்தலைவர்களுக்கும் இடையில் முன்பே நடைபெற்றதாக எந்த ஒரு வழக்காடுதல் பற்றியும் மத்தேயு பதிவு செய்யவில்லை, ஆனால் அவர் ஓய்வுநாளின் பாரம்பரியம் பற்றி ஏற்கனவே வாதத்தில் ஈடுபட்டிருந்தார் என்று மற்ற சுவிசேஷ விபரங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன (காண்க மாற்கு 2:24; யோவான் 5:16, 18). அந்த நிகழ்ச்சிகள் இதற்குப் பின்பு நடைபெறுவையாக இருப்பினும், மதத்தலைவர்களுடன் இயேசு போராடி, மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் புறக்கணிக்கும்படி மக்களை ஊக்குவித்தார் என்று விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ அவர் குற்றம் சுமத்தப்படவிருந்தார். ஆகவே இயேசுவின் ஊழியத்தின் தொடக்ககாலத்திலேயே, நியாயப்பிரமாணத்தைப் பற்றிய தமது நிலைப்பாட்டை அவர் தெளிவாக உரைத்தல் அவசியமாக இருந்தது.

இயேசு நியாயப்பிரமாணத்தை அழிக்க வரவில்லை என்பதை வலியுறுத்துதலில் இயேசுவின் *உடனடியான* நோக்கம் இருந்தது என்பது கூடுதலான கருத்தாகும். திகைக்கச் செய்யும் கூற்றுக்களை, மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு இயேசு மதிப்பெதுவும் தரவில்லை என்று அர்த்தப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளக்கூடும் கூற்றுக்களை வரிசையாக அவர் கூறவிருந்தார். அந்தக் கூற்றுக்களைக் கூறும் முன்பு, அவர் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தத்தின் மீது மிக உயர்வான மதிப்பை கொண்டிருந்தார் என்பதை நிலைநாட்ட அவர் விரும்பினார்.

அது இன்னொரு கேள்வியை தூண்டுகிறது: மோசேயின் நியாயப்பிரமாணத்தை அழிப்பதற்கு இயேசு வரவில்லை என்று அவரே

கூறியபோது, அவர் எதை அர்த்தப்படுத்தினார்? சிலர் இதை, மோசேயின் நியாயப்பிரமாணம் தனது நித்தியத்துவமான தன்மையில் இன்றைய நாட்களிலும் அமலில் உள்ளது என்று போதிப்பதற்கு ஆதாரமாக எடுத்துக்கொள்கின்றனர் - ஆனால் பல வேதவசனங்கள் இதற்கு எதிரான கருத்தையே சுட்டிக்காண்பிக்கின்றன. எடுத்துக்காட்டாக, எபிரெயர் 9ம் அதிகாரம் "*முதலாம்* உடன்படிக்கையைப்" பற்றிப் பேசுகிறது, மற்றும் அதன்பின்பு அந்த அதிகாரம், இயேசு "*புது* உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்" (வசனங்கள் 1, 15; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்று கூறுகிறது. இரு உடன்படிக்கைகள் பற்றி மேலும் குறிப்பிடும் அடுத்த அதிகாரம், "இரண்டாவதை *நிலைநிறுத்துவதற்கு* முதலாவதை *நீக்கிப்போடுகிறார்*" என்று கூறுகிறது (10:9ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பவுல் பின்வருமாறு எழுதினார்:

> எப்படியெனில், அவரே [இயேசுவே] நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் [யூதர்களையும் புறஜாதிகளையும்] ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் [மோசேயின் நியாயப்பிரமாணத்தை] தகர்த்து, சட்டதிட்டங்களாகிய *நியாயப்பிரமாணத்தைத்* தம்முடைய மாம்சத்தினாலே [சிலுவையின்மீது] *ஒழித்து*[6], இருதிறத்தாரையும் [யூதர்களையும் புறஜாதிகளையும்] தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி (எபேசியர் 2:14, 15; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இயேசு நியாயப்பிரமாணத்தை அழிக்கத் தாம் வரவில்லை என்று கூறினார், ஆனால் அவர் நியாயப்பிரமாணத்தை ஒழித்தார் என்று பவுல் கூறினார். இவ்விரு கூற்றுக்களும் எவ்வாறு ஒப்புரவாக்கப்பட முடியும்? நாமகரணக் கூட்டத்தைச் சேர்ந்த பல எழுத்தாளர்கள், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணங்களைப் பின்வரும் மூன்று வகைகளாகப் பிரிப்பதன் மூலம் முரண்பாடாகத் தோன்றும் இக்கூற்றுகளை ஒப்புரவாக்க முயற்சி செய்கின்றனர்: சடங்காச்சார ரீதியானவை, சட்ட ரீதியானவை[7] மற்றும் ஒழுக்க ரீதியானவை. இந்த அணுகுமுறையை முன்மொழிபவர்கள், சடங்காச்சார ரீதியான பிரமாணங்களும் சட்டரீதியான பிரமாணங்களும் அழிக்கப்பட்டு விட்டன, ஆனால் ஒழுக்க ரீதியான பிரமாணங்கள் அழிக்கப்படவில்லை என்று கூறுகின்றனர். அவர்கள், மத்தேயு 5:17ல் *ஒழுக்க ரீதியான* பிரமாணங்களை அழிக்க வரவில்லை என்று மாத்திரமே இயேசு அர்த்தப்படுத்தினார் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்த அணுகுமுறையில் பல பிரச்சனைகள் உள்ளன. மோசேயினுடைய நியாயப் பிரமாணத்தின் மூன்று பகுதிகளாக முன்மொழியப்பட்டவை யூதர்களும் தொடக்க காலக் கிறிஸ்தவர்களும் அறிந்திராத ஒன்றாக இருந்தது என்பது ஒரு பிரச்சனையாகும்.[8] இயேசு, *ஒழுக்க ரீதியான* சட்டத்தை அழித்துப் போடுதல் பற்றி எதுவும் கூறவில்லை என்பது இரண்டாவது பிரச்சனையாக உள்ளது. நியாயப்பிரமாணத்தை அழிப்பதற்கு அவர் வரவில்லை என்று அவர் கூறினார். 18ம் வசனத்தில் இயேசு, ஒரு சிறு எழுத்து, ஒரு எழுத்தின் உறுப்பு உட்பட, நியாயப்பிரமாணம் "முழுவதையும்" தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று சுட்டிக்காண்பித்தார்.

மூன்றாவது பிரச்சனை ஒன்று பின்வருவதைப் போன்று விளக்கப்படுத்தப்

படலாம்: நியாயப்பிரமாணத்தில் ஒன்று, சடங்காச்சார ரீதியானதா, சட்ட ரீதியானதா அல்லது ஒழுக்க ரீதியானதா என்று முடிவு செய்யும் உரிமையைக் கொண்டிருப்பது யார்? மூன்று வகைகளை முன்மொழிபவர்களில் பலர், பத்துக் கட்டளைகளே ஒழுக்க ரீதியான சட்டங்களாக பழைய ஏற்பாட்டில் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது என்று பேசுகின்றனர். விஷயம் அவ்வாறு இருந்தால் மற்றும் ஒழுக்கரீதியான அந்தப் பிரமாணங்கள் இன்னமும் நம்மைக் கட்டுப்படுத்துகின்றன என்றால், நாம் வாரத்தின் முதல் நாளில் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பதற்குப் பதிலாக ஏழாம் நாளை ஓய்வு நாளாகக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கும். ஒரு மதக்குழு பழைய ஏற்பாட்டின் ஓய்வுநாள் ஆசரிப்பைத் தக்க வைக்க உரிமை கொண்டுள்ளது என்றால், பழைய ஏற்பாட்டின் இன்னொரு நடைமுறையை வேறொரு மதக்குழு தக்கவைத்துக் கொள்ளக் கூடாது என்று கூறும் உரிமையைக் கொண்டிருப்பது யார்? மூன்று வகை உள்ளது என்ற அணுகுமுறை, அது தீர்த்து வைப்பதைக் காட்டிலும் அதிகமான பிரச்சனைகளை உருவாக்குகிறது.

முரண்பாடாகத் தோன்றும் இவ்விஷயத்திற்கான தீர்வானது, மத்தேயு 5:17-20ல் இயேசு கூறிய *எல்லாவற்றையும்* கவனமாக ஆழ்ந்து சிந்தித்தலில் காணப்படுகிறது. அவரது திறவு வாக்கியம் பின்வரும் வார்த்தைகளுடன் முடிகிறது: "நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்" (வசனம் 17ஆ). "நிறைவேற்றுகிறதற்கே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*pleroo* என்பதில் இருந்து வந்துள்ள) கிரேக்க வார்த்தை "நிரப்ப, முழுமையாக்க" என்ற அடிப்படை அர்த்தம் கொண்டுள்ளது.[9] 17ம் வசனத்தில் அர்த்தத்தின் பல சாயல்கள் சாத்தியமாக உள்ளன. இது பின்வருமாறு புரிந்து கொள்ளப்பட முடியும்:

1. "*நிறைவேற்ற* = செய்தல், செயல்படுதல்"
   அல்லது
2. "*முழு விளக்கத்திற்குக் கொண்டுவருதல்* = அதன் உண்மை அர்த்தத்தை முன் காண்பித்தல்"
   அல்லது
3. *நிரப்புதல்* = முழுமையாக்குதல்."[10]

நம்மை நாம் (திறவுக் கூற்றைத் தொடர்ந்து வரும் உதாரணங்கள் என்ற) சந்தர்ப்பப் பொருளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்திக் கொண்டால், மேலே பட்டியலிடப்பட்டவற்றில் மத்தியில் உள்ளது மாத்திரமே, "நிறைவேற்றுதல்" என்பதன் முதன்மை அர்த்தமாகக் காணப்படும்: [நியாயப்பிரமாணத்தை] "முழு வெளிப்பாட்டிற்குக் கொண்டுவருதல்," "அதன் உண்மையான [அர்த்தத்தில்] அதை காண்பித்தல்." எடுத்துக்காட்டாக, 27 மற்றும் 28ம் வசனங்களில் இயேசு, "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று" என்று கூறினார். பாவத்தை விளக்கப்படுத்துதல், வெளிப்படுத்துதல், கண்டனம் பண்ணுதல் மற்றும் [அதைச்

செய்வதற்கான] உற்சாகத்தை இழக்கச்செய்தல் என்பவை நியாயப்பிரமாணத்தின் நோக்கத்தில் உள்ளடங்கியிருந்தன (காண்க கலாத்தியர் 3:19அ).[11] "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக" என்ற கட்டளை விபசாரம் செய்வதை ஊக்கம் இழக்கச் செய்வதாக இருந்தது. விபசாரம் செய்தல் என்பது தவறானதாக உள்ளதென்றால், விபசாரத்திற்கு வழிநடத்தும் செயலும் தவறானதாகவே உள்ளது என்பதைப் பலர் உணர்ந்து அறியவில்லை. இதை இயேசு, மத்தேயு 5:27, 28ல் தெளிவாக்கினார். ஆகவே ஒரு கருத்தில், அவர் விபசாரம் பற்றிய கட்டளையை அதன் முழு வெளிப்பாட்டிற்குக் கொண்டுவந்தார்.

**எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டியவை (வசனம் 18)**

இருப்பினும் "நிறைவேற்றுதல்" என்பதன் ஒரு விளக்கத்துடன் நம்மை நாம் வரையறைப்படுத்திக் கொள்ள இயலாது. 18ம் வசனத்தைக் கண்ணோக்குங்கள்: "வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." நான், இந்த வாக்கியத்தின் முடிவில் உள்ள சொற்றொடரின் மீது கவனத்தைக் குவிக்க விரும்புகிறேன், ஆனால் முதலில் இவ்வசனத்தின் மற்ற சொற்றொடராக்கத்தைச் சுருக்கமாக விளக்க என்னை அனுமதியுங்கள்:

- "வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும்" என்பது கற்பனைசெய்ய இயலாத சிலவற்றிற்கான மரபுச் சொற்றொடராக இருப்பதைக் காட்டிலும் காலத்திற்கான திட்டவட்டமான ஒரு குறிப்பாக இருத்தல் என்பதில் குறைவுபடுகிறது.[12] இவ்வார்த்தைகளை இதன் இணைவசனப் பகுதியான லூக்கா 16:17ல் உள்ள பின்வரும் சொல்விளக்கத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள்: "வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப்பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்." வானமும் பூமியும் ஒழிந்துபோகும் வரையில் மோசேயின் நியாயப்பிரமாணம் செயல்விளைவில் இருக்கும் என்று இயேசு கூறவில்லை. மாறாக, நியாயப்பிரமாணம் "நிறைவடைந்து" மற்றும் "அதில் உள்ள யாவையும் நிறைவேறும்" *வரையில்* அது ஒழிக்கப்பட *இயலாது* என்றே அவர் வலியுறுத்தினார்.
- "நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம்" என்பது - இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வகையில் இச்சொற்றொடர் - முந்திய வசனத்தின் "நியாயப்பிரமாணம்" மற்றும் "தீர்க்கதரிசனம்" என்பதுடன் இணையாக உள்ளது. இது பழைய ஏற்பாடு முழுவதையும் குறிக்கிறது.
- "அதில் ஒரு சிறு எழுத்தாகிலும்" என்பது, கிரேக்க அகரவரிசையில் உள்ள (*i*, என்ற) மிகச்சிறிய எழுத்தாகிய (*iota*) என்பதில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இங்கு அனேகமாக, எபிரெய அகரவரிசையில் உள்ள *yod* என்ற மிகச்சிறிய எழுத்திற்கான நோக்கங்கொண்ட குறிப்பு உள்ளது எனலாம்.[13] "ஒரு எழுத்தின் உறுப்பாகிலும்"[14] என்று மொழிபெயர்க்கபட்டுள்ள வார்த்தையானது ("கொம்பு" அல்லது "சுழி" என்று தமிழில் கூறப்படுகிறது) *keraia* என்பதற்கான வார்த்தையாக உள்ளது. இந்தச் சொற்றொடர், "ஒரு

எபிரெய எழுத்தை இன்னொரு எபிரெய எழுத்தில் இருந்து வேறுபடுத்தும் சிறு சுழி அல்லது கொம்பு என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது."[15] இவ்விரு சொற்றொடர்களும் பழைய ஏற்பாட்டு வெளிப்படுத்துதலில் மிகமிகச் சிறிய பகுதியைக் குறிக்கின்றன. இயேசுவின் வார்த்தைகள் பின்வருமாறு பொழிப்புரை செய்யப்பட்டிருப்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்: "நியாயப்பிரமாணம் நிறைவேறித் தீரும் வரையில், அதில் உள்ள ஒரு (i) என்ற எழுத்தின் ஒரு புள்ளியாவது அல்லது ஒரு (t) என்ற எழுத்தின் குறுக்குத் கோடாவது ஒழிந்துபோகாது."

- "மெய்யாகவே" என்பது (*amen,* என்ற) கிரேக்க வார்த்தையில் இருந்து வந்துள்ளது. "மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்பது "இயேசுவின் சொந்தக் கையெழுத்தாக உள்ளது: வேறு எந்தப் போதகரும் இதைப் பயன்படுத்தியிருப்பதாக அறியப்படவில்லை. மத்தேயு இதை 31 முறைகள் பதிவு செய்துள்ளார், யோவான் (இரட்டை ஆமென் என்பதுடன்) இதை 25 முறைகள் பதிவுசெய்துள்ளார். இது ... ஒரு கூற்றானது முக்கியமானதாகவும் அதிகாரத்துவம் உடையதாகவும் உள்ளதைக் குறிக்கிறது."[16] "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்பது 5ம் அதிகாரத்தின் எஞ்சிய பகுதிக்கான திறவுகோல் குறிப்பாக உள்ளது (வசனங்கள் 22, 26, 28, 32, 34, 39, 44).

அது நம்மை "எல்லாம் நிறைவேறுமளவும்" என்ற நிபந்தனைச் சொற்றொடருக்குக் கொண்டு வருகிறது. "நிறைவேறுதல்" என்பது பொதுவான கிரேக்க வினைச் சொல்லாகிய *ginomai* ("நான் ஆகிறேன்"[17]) என்பதன் (ஒருமுறை மாத்திரம் நடந்த) கடந்த கால வினைச் சொல்லில் இருந்து வந்துள்ளது. "எல்லா விஷயங்களும் இருக்க வரும் வரையிலும்" என்பதே இதன் கருத்தாக உள்ளது. KJV மற்றும் NKJV வேதாகமங்கள், எல்லாம் "நிறைவேற்றப்பட்டு" ("fulfilled") இருக்கும் விஷயங்களைக் குறிக்கின்றன, அதே வேளையில் மற்ற மொழிபெயர்ப்புகள் "நிறைவேற்றப்பட்டு" ("accomplished") என்ற வார்த்தையைக் கொண்டுள்ளன (ASV; NASB; RSV; NIV). "Accomplished" என்ற வார்த்தை, 17ம் வசனத்தின் "நிறைவேறுதல்" என்பதை உள்ளடக்குகிறது, ஆனால் இது இன்னும் அதிகமானவற்றைக் கொண்டுள்ளது. நியாயப்பிரமாணம் குறித்த *எல்லா* விஷயங்களும் "நிறைவேற்றப்பட்டு" முடியும் வரையிலும் மோசேயின் நியாயப்பிரமாணம் அமலில் இருக்க வேண்டியதாயிற்று. அது எப்போது மற்றும் எவ்வாறு நடந்தது? பழைய ஏற்பாட்டு வெளிப்படுத்துதலைப் பொறுத்தமட்டில், எல்லா விஷயங்களும் *இயேசுவின்* மூலமாக - ஏற்கனவே கருத்துத் தெரிவிக்கப்பட்டபடி, ஒருபகுதி அவரது போதனையின் மூலமாகவும், ஆனால் முழுமையும் அவரது நபர்த்துவத்தின் மூலமாகவும் - நிறைவேற்றப் பட வேண்டியதாக இருந்தது. நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நோக்கங் கொண்டிருந்த நியாயப்பிரமாணத்தின் எல்லா விஷயங்களையும் பலன் தருவதாக்குதல் என்பது இயேசு இந்த பூமிக்கு வந்ததற்கான ஒரு காரணமாக இருந்தது.

*இயேசு நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகக் கடைப்பிடித்தார் என்ற வகையில் அவர் அதை நிறைவேற்றினார்.* (அவர் ஒருவரே எல்லாக்காலத்திலும் அதைச் செய்த ஒரே நபராக இருந்தார்.) அவர் "நியாயப்பிரமாணத்தின் கீழ் பிறந்த"

ஒரு யூதராகவும் அதன் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்பட்டவராகவும் இருந்தார் (கலாத்தியர் 4:4). மனிதரால் ஏற்படுத்தப்பட்ட யூதத்துவப் பாரம்பரியங்களுக்கு அவர் சிறிதளவே மதிப்புக் காண்பித்தவராக இருந்தார், ஆனால் தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு அவர் [இயேசு] அதிகபட்ச மதிப்பைக் காண்பித்தார். தேவனுடைய சித்தத்தைச் செய்தல் குறித்த அவரது எண்ணப்போக்கானது, அவர் ஞானஸ்நானம் பெற்றபோது அவர் உரைத்த வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது: "... இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" (மத்தேயு 3:15). நியாயப்பிரமாணம் எவ்வகையான வாழ்வை உண்டாக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந்ததோ, அவ்வகையான வாழ்வை அவர் செயல்விளக்கப்படுத்தினார். அவர் விசாரணையில் இருந்தபோது, அவர் கடைப்பிடிக்கத் தவறியதாக எந்த ஒரு கற்பனையையும் எவரொருவரும் சுட்டிக்காண்பிக்க இயலாதிருந்தது (காண்க மாற்கு 14:55-59).

*இயேசு நியாயப்பிரமாணத்தில் உள்ள வகைகளின் (நிழல்களின்) எதிர்வகையாக இருந்தார் என்ற வகையில் அவர் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார்* (காண்க கொலோசெயர் 2:16, 17; எபிரெயர் 8:4, 5; 10:1) *மற்றும் மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாகவும் அவர் இருந்தார்* (காண்க லூக்கா 24:27).[18] அவர் "காலம் நிறைவேறிற்று" என்ற செய்தியோடு தமது சொந்த ஊழியத்தைத் தொடங்கினார் (மாற்கு 1:15). பூமியில் அவர் செய்த ஊழியத்தைக் குறித்து, இது அல்லது அது, "தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது" (மத்தேயு 1:22; காண்க 2:23; 3:3; 4:14) என்று நிலையாக உரைக்கப்பட்டது.

*எல்லாவற்றிற்கும் மேலாக இயேசு, பாவம் மற்றும் அதற்குரிய தண்டனை என்ற பிரச்சனைக்குத் தாமே தீர்வைக் கொண்டுவந்தார் என்ற வகையில், அவர் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார்.* நியாயப்பிரமாணம் என்பது, பாவத்தின் பிரச்சனைக்கு முக்கியத்துவம் கொடுத்தது, ஆனால் அது பாவத்தைக் குறித்து ஏதொன்றையும் செய்ய வல்லமையற்றதாக இருந்தது (காண்க ரோமர் 8:3). இயேசு சிலுவையில் மரித்துபோது, அவர் நமது பாவங்களுக்கான தண்டனையைத் தாமே ஏற்றுக்கொண்டார் (காண்க 2 கொரிந்தியர் 5:21; கலாத்தியர் 3:13). "முடிந்தது!" என்பதே சிலுவையின் மீது அவரது கடைசிக் கதறலாக இருந்தது (யோவான் 19:30). அவரது வாழ்வு மாத்திரமல்ல, ஆனால் மனிதகுலத்தின் பாவங்களுக்காகப் பலியாகச் செலுத்தப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 15:3) என்ற அவரது ஊழியமும் அப்போது முடிந்தது.

ஆகவே இயேசு, முன்பு குறிப்பிடப்பட்ட இரு கருத்துக்களில் நியாயப்பிரமாணத்தை "நிறைவேற்றினார்": "*நிறைவேற்ற* = செய்தல், செயல்படுதல்" மற்றும் "*நிரப்புதல்* = முழுமையாக்குதல்." அவர் இந்த மூன்று கருத்துக்களிலும் நியாயப்பிரமாணத்தை "நிறைவேற்றிய" போது, "*எல்லாம்* நிறைவேற்றப்பட்டது." நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம் என்ற வகையில், பழைய உடன்படிக்கையானது அப்போது சட்டப்பூர்வமாக விலக்கப்பட்டு அவரது புதிய உடன்படிக்கை அறிமுகப்படுத்தப்பட்டது. பவுல், "நியாயப்பிரமாணம் ... வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி *வருமளவும்* அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு ..." என்று எழுதினார் மற்றும் அந்தச் "சந்ததி" கிறிஸ்துவே என்றும்

அவர் தெளிவாக்கினார் (கலாத்தியர் 3:19, 16; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மீண்டுமாகப் பவுல், "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே" என்று கூறினார் (கலாத்தியர் 3:24, 25). ஹரோல்ட்ஃபவ்லர் என்பவர் நியாயப்பிரமாணத்தைக் குறித்துப் பின்வருமாறு எழுதினார்:

> ... எல்லா விஷயங்களும் (உண்மையாகவோ அல்லது வலிவார்ந்த வகையிலோ) ஏற்கனவே இயேசுவினால் நிறைவேற்றப்பட்டிருந்தன, ஏனெனில் அவர் தமது வாழ்வு, செய்தி, பாடுகள், மகிமைப்படுதல், சபை அல்லது தமது மகிமையைத் திரும்பப் பெறுதல் என்ற எல்லாவற்றையும், தேவனுடைய [பழைய ஏற்பாட்டு] முன்னறிவித்தல்கள் மற்றும் தர அளவைகள் ஆகியவற்றின் எல்லாக் கொள்கைகளையும் நிறைவேற்றும் வகையில் இயக்கத் தொடங்கியிருந்தார்.[19]

இயேசு பழைய உடன்படிக்கையை "நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்த" போது (கொலோசெயர் 2:14), அதை அவர் "தம்முடைய மாம்சத்தினாலே" ஒழித்தார் (எபேசியர் 2:15) அதே வேளையில் - அவரது மரணத்தில் - அவரது புதிய உடன்படிக்கை அமுலுக்கு வந்தது (காண்க எபிரெயர் 9:15-17).

யாரேனும் ஒருவர், "ஒரு நிமிடம் பொறுங்கள்! இயேசு பழைய ஏற்பாட்டை அழிக்க வரவில்லை, அவர் அதை நிறைவேற்றவே வந்தார் என்று நீங்கள் கூறினீர்கள். ஆனால் இப்போது நீங்கள், இயேசு பழைய ஏற்பாட்டை நிறைவேற்றியபோது அது அழிக்கப்பட்டது என்று கூறுகிறீர்களே. இது எனக்கு அதே விளைவாக இருப்பதைப் போன்றே ஒலிக்கிறது, எனவே இது ஏற்படுத்துகிற வேறுபாடு என்ன?" என்று கூறி மறுதலிக்கலாம். *தேவனுடைய வசனம் குறித்த ஒருவரின் எண்ணப்போக்கே* வேறுபாடாக உள்ளது, அது மிகவும் முக்கியமான வேறுபாடாக உள்ளது.

நீங்களும் நானும் ஒரு ஒப்பந்தம் போட்டுக்கொள்வதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அந்த ஒப்பந்தத்தில் நான் உங்களுக்கு, ஒரு குறிப்பிட்ட தொகை செலுத்தித் தீர்க்கப்படும் வரையிலும், ஒவ்வொரு மாதமும் [உங்களால்] "செய்யப்படும் வேலைகளுக்காக" ஒரு தொகை செலுத்த ஒப்புக் கொள்கிறேன். இப்போது பின்வரும் காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள். அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற நான் நோக்கங் கொண்டிருக்கவில்லை என்றும், அந்த ஒப்பந்தத்தை இல்லாமல் போகும்படி செய்வதற்கு என்னால் முடிந்த எல்லாவற்றையும் நான் செய்வேன் என்றும் நான் அறிவித்தால் என்னவாகும்? ஒருவேளை நான் உங்களிடம் வந்து கண்களுக்கு முன்பாக அந்த ஒப்பந்தப் பத்திரத்தைக் கிழித்துகூடப் போடலாம். இது என்னைப் பற்றிக் கூறுவது என்ன? இது உங்களுக்கும் நாம் ஒப்புக்கொண்ட விஷயத்திற்கும் எவ்வகையான மதிப்பைக் காண்பிக்கும்?

இப்போது இரண்டாவது காட்சியொன்றைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். ஒரு ஒப்பந்தத்தை நான் முறித்துவிட நோக்கங் கொண்டிருப்பதாக வதந்தியொன்று பரவுகிறது, எனவே நான் உங்களிடம் வந்து, நமது ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் நான் எல்லாவகையிலும் விருப்ப

நோக்கம் கொண்டுள்ளேன் என்று உங்களிடம் வாக்களித்திருந்த ஒவ்வொரு பைசாவையும் செலுத்துகிறேன். இந்த இரு காட்சிகளையும் மனதில் வைத்துக் கொண்டு, பின்வருவதைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: நான் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுகிறபோது, அது என்னைக் கட்டுப்படுத்துதலை விட்டொழிக்கிறது. ஆகவே இவ்விரு விஷயத்திலும் முடிவு விளைவு ஒன்றாகவே உள்ளது, அல்லது குறைந்தபட்சம் ஒன்றுபோல உள்ளது. நான் பணம் செலுத்துதலை [கடைசியில்] நிறுத்தி விடுகிறேன். இருப்பினும், எனது எண்ணப்போக்கில் மிகப்பரந்த வேறுபாடு ஒன்றை நீங்கள் காண முடிவதில்லையா? முதல் நிகழ்வில், நான் நமது ஒப்பந்தத்திற்கு மதிப்பு எதையும் கொண்டிருப்பதில்லை, ஆனால் இரண்டாவது நிகழ்வில் நான் அதற்கு மிகப்பெரிய மதிப்பைக் கொண்டிருக்கிறேன்.

பழைய ஏற்பாடு, நிறைவேற்றப்பட்ட உடன்படிக்கையான பின்பு, அது தேவனுடைய மக்களைக் கட்டுப்படுத்துவதை விட்டொழித்திருக்கும். இருப்பினும் அதே வேளையில், அதன் மீது தாம் [இயேசு] மிகப்பெரும் மதிப்புக் கொண்டிருந்ததை ஒவ்வொருவரும் அறிய வேண்டும் என்று இயேசு விரும்பினார். தேவனுடைய நியாயப்பிரமாணம் என்பது அவரது இயல்பின் விளக்கமாக இருக்கிறது.[20] ஒருவர் தேவனை மதித்துக் கொண்டே அவரது நியாயப்பிரமாணத்தை மதிக்காது இருக்க இயலாது. ஆகவே இயேசு அதன் [நியாயப்பிரமாணத்தின்] நிபந்தனைகளை நிறைவேற்றத் தம்மை ஒப்புக்கொடுத்திருந்தார்.

## தேவனுடைய வசனத்தை நாம் மதிக்க வேண்டும் (5:19, 20)

### மோசமான மற்றும் நல்ல உதாரணங்கள் (வசனம் 19)

இயேசு, தமது உரையைக் கேட்டவர்கள் யாவரும் தம்மைப் போன்றே தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மதிக்க வேண்டும் என்று ஊக்குவித்தார். நமது வேதபாட வசனப்பகுதியின் 19ம் வசனத்தில் அவர் பின்வருமாறு தொடர்ந்து கூறினார்,

> ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்.

''மீறி'' என்பது 17ம் வசனத்தில் ''அழிக்கிறதற்கு'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையின் வேர்வார்த்தையில்[21] இருந்து வந்துள்ளது. KJV வேதாகமத்தில் 19ம் வசனத்தில் “break” என்றுள்ளது. ஒருவர் நியாயப்பிரமாணத்தை வேண்டுமென்றே மீறுவதன் மூலம் அதற்கு மதிப்பின்மையைக் காண்பிக்கும்போது, அவர் தமக்கு நியாயப்பிரமாணம் முக்கியமற்றது என்று செயல் விளக்கப்படுத்துகிறார். அவரது செயல்களினால் அவர் அதை “அழித்துள்ளார்.”

“இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும்”

என்ற சொற்றொடருக்குச் சில விளக்கங்கள் தேவைப்படலாம். மோசேயின் நியாயப்பிரமாணத்தில், யூத ரபீக்கள் 613 சட்டங்களை எண்ணிக் கணக்கிட்டு இருந்தனர். அந்த 613 சட்டங்களையும் நினைவில் வைத்துக்கொள்வதே கடினமாக இருந்தது, அவற்றைக் கடைப்பிடித்தல் என்பது இன்னும் அதிக கடினமாக இருந்தது, எனவே அவர்கள் அந்த சட்டங்களை, "கனத்த" ("கனமான," "பெரிய") மற்றும் "இலேசான" ("குறைவான") சட்டங்கள் என்று பிரித்திருந்தனர். அவர்கள் "கனத்தவை," "கனமானவை" அல்லது "பெரியவை" என்று அழைத்த சட்டங்களை வலியுறுத்தினர். சொற்றொடராக்கத்தின் அவ்வகையை இயேசு, பரிசேயர்களிடத்தில், "நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்" என்று கூறியபோது பயன்படுத்தினார் (மத்தேயு 23:23). இது, "போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது" என்று கேட்ட நியாயசாஸ்திரியின் சிந்தனைக்குப் பின்னால் உள்ள வகையாக இருந்தது (மத்தேயு 22:35; காண்க 35-40). இயேசு, "இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றை" பற்றிப் பேசியபோது அவர், தமது உரையைக் கேட்டவர்கள் "இலேசானது" அல்லது "குறைவானது" என்று பண்புபடுத்தி இருக்கக் கூடிய எந்த ஒரு கட்டளையையும் குறிப்பிட்டார். செயல்விளைவில் அவர், தேவனுடைய எல்லா கட்டளைகளும் முக்கியமானவையாக உள்ளன மற்றும் அவற்றில் எதையும் நாம் தெரிந்தே மீறக்கூடாது என்று கூறினார்.

ஒரு சில ஆண்டுகளில் மோசேயின் நியாயப்பிரமாணம் இயேசுவின் சொந்த போதனையினால் மேற்கொள்ளப்படுவதாக இருந்தபோது அவர், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தல் பற்றி ஏன் இவ்வளவு வலியுறுத்தினார் என்று சிலர் வியப்படைகின்றனர். மோசேயின் நியாயப்பிரமாணத்தை மதிக்காதவர்கள் இயேசுவின் கட்டளைகளையும் மதிக்க மாட்டார்கள் என்பது ஒரு காரணமாக இருந்தது.[22] கீழ்ப்படியாமை என்ற பழக்கமானது புதிய உடன்படிக்கைக்கும் எடுத்துச் செல்லப்படுவதாக இருக்கும்.

இயேசு, "இந்த கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும்" தங்கள் செயல்களால் மீறுபவர்களை மாத்திரமல்ல, ஆனால் "மற்றவர்களும் அவ்வாறே செய்யும்படி" போதித்தவர்களையும் கண்டனம் பண்ணினார். ஒருவர் நியாயப்பிரமாணத்தின் சட்டம் ஒன்றைத் தெரிந்தே மீறுகிறபோது, அவர் பொதுவாகத் தமது செயல்களை நியாயப்படுத்த முயற்சி செய்கிறார். அவர், "அந்தச் சட்டம் எந்தக் கருத்தையும் ஏற்படுத்துவதில்லை, எனவே நாம் அதற்குக் கீழ்ப்படிகிறோமா இல்லையா என்பது ஒரு பொருட்டல்ல" என்று கூறலாம். அவர், உதாரணத்தினாலும் வார்த்தையினாலும், மற்றவர்களும் அந்தச் சட்டத்தை மீறும்படி போதிக்கிறார். இவ்வகையான தனிநபர் "பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்" என்று இயேசு கூறினார்.

அந்த உதாரணத்திற்கு நேர்மாறாக, கட்டளைகள் "பெரிதோ" அல்லது "சிறிதோ" அவற்றை "கடைப்பிடித்து போதிக்கிறவர்" இருக்கிறார். இவ்வகையான நபர், "பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்" என்று இயேசு கூறினார். "பரலோக இராஜ்யம்" என்பது இயேசு, "சமீபித்திருக்கிறது" (4:17) என்று கூறிய இராஜ்யத்தைக் குறிப்பிடுகிறது - வேறு வார்த்தைகளில்

கூறுவதென்றால், "அவர் நிலைநாட்ட இருந்த சபையை" குறிப்பிடுகிறது.[23]

இராஜ்யத்தில் சிலர் "சிறியவர்கள்" என்றும் சிலர் "பெரியவர்கள்" என்றும் அழைக்கப்படுவர் என்பதாக இயேசு கூறியபோது, அவர் எதை அர்த்தப்படுத்தினார்? R. T. ஃபிரான்ஸ் என்பவர், "நிறைவான பலன் அல்ல, சீஷத்துவத்தின் பண்பே இங்கு சிந்தனையாகும்" என்று கருத்துத் தெரிவித்தார்.[24] ஆச்சரியப்படத்தக்க நேரெதிர்க் கருத்திற்காக இந்தக் சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன: *மிகச்சிறிய* கட்டளையை மீறுபவர் *சிறியவர்* என்று அழைக்கப்படுவார், ஆனால் அதற்கு நேரெதிராகச் செய்பவர் நேரெதிராக அழைக்கப்படுவார்: *பெரியவர்*. நாம் பின்வரும் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும். தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல், மற்றவர்களும் அதற்குக் கீழ்ப்படியக் கூடாது என்று போதிக்கும் ஒருவர் போதகர்களிலேயே "சிறியவராக" [மோசமானவராக] உள்ளார். அவ்வகையான நபரை சபையில் போதிக்கும்படி நாம் ஒருக்காலும் அனுமதிக்கக் கூடாது. தேவனுடைய கட்டளையை கடைப்பிடித்து அதை மக்களும் கடைப்பிடிக்கும்படி போதிப்பவரே, தேவனுடைய பார்வையில் "பெரியவராக" இருக்கிறார். கர்த்தருடைய சபையில் நமக்கு இவ்வகைப்பட்ட போதகரே தேவை.

**மிக மோசமான உதாரணங்கள் (வசனம் 20)**

கட்டளைகளை மீறி, அதையே செய்யும்படி மற்றவர்களுக்குப் போதித்தவர்களைப் பற்றி இயேசு குறிப்பிட்டபோது அவர், போதகர்கள் என்று யூதர்கள் உயர்வாக மதித்திருந்த சிலரை நினைவூட்டப் பட்டார். கிறிஸ்துவின் அடுத்த வார்த்தைகள் அவர் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்குத் திகைப்பூட்டுவதாகவும் அதிர்ச்சியூட்டுவதாகவும்கூட இருந்திருக்கும்: "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி[25] அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 5:20). "வேதபாரகர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*grammateus* என்ற) வார்த்தை அடிப்படையாக, "எழுதுகிற ஒருவர்" என்று அர்த்தப்படுகிறது (இது "எழுதப்பட்டுள்ள" என்பதற்கான *gramma* என்ற வார்த்தையில் இருந்து வருகிறது).[26] இயேசுவின் நாட்களில், வேதபாரகர்கள் என்போர் நியாயப்பிரமாணத்தைத் தொழில் முறையாகக் கற்ற மாணவர்களும் போதகர்களுமாக இருந்தனர்.[27] "பரிசேயர்" என்பது "பிரிக்கப்பட்டு" இருப்பவர் என்று சுட்டிக்காண்பிக்கும் கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது.[28] பரிசேயர்கள் தங்களையே "பிரித்துக் கொண்டு," மோசேயின் நியாயப்பிரமாணத்தில் உள்ள ஆயிரக்கணக்கான சட்டரீதியான விதிகள் மற்றும் முறைமைகளையும் அதன் தொடர்பான பாரம்பரியங்களையும் கடைப்பிடிப்பதற்குத் தங்களையே அர்ப்பணித்திருந்தனர். "வேதபாரகர், பரிசேயர்" ஆகியோரைப் பற்றி இயேசு குறிப்பிட்டபோது அவர், இஸ்ரவேல் மக்களினத்தில் மிகவும் கற்றறிந்த மற்றும் மிகவும் வைராக்கியம் கொண்டிருந்த தனிநபர்களைப் பற்றிப்பேசினார். அவர்கள், "தங்கள் சொந்த மதிப்பீட்டிலும் மக்களின் மதிப்பீட்டிலும், நீதியின் மாதிரிகளாக இருந்தனர்."[29] இயேசுவின் உரையைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், "நமது நீதியானது அவர்களின் நீதியை விஞ்சி நிற்குதல் எவ்வாறு சாத்தியமாகும்?" என்று

ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும்.

ஜான் R. W. ஸ்டாட் என்பவரின் கருத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள். நமது நீதியானது வேதபாரகர் மற்றும் பரிசேயர் ஆகியோரின் நீதியைக் காட்டிலும் அதிகமாக இருத்தல் என்பது "அளவு என்பதைக் காட்டிலும் வகையைப் பற்றியே அதிகமானதாக" உள்ளது. வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள் 230 கட்டளைகளைக் கடைப்பிடித்தனர், எனவே நாம் 231 கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இயேசு கூறவில்லை. மாறாக "ஆழமானதாக, இருதயத்தின் நீதியில் உள்ளதாக" இருக்க வேண்டும் என்பதே நமது நீதிக்கான அவரது விருப்பமாக இருக்கிறது.[30]

இயேசு, வேதபாரகர் பரிசேயர் ஆகியோரின் நீதி என்று அழைக்கப்பட்ட விஷயத்தினுடைய வெறுமைத்தன்மையைப் பல வேளைகளில் வெளிப்படுத்தினார். லூக்கா 18:9-14ல் பரிசேயன் ஆயக்காரன் ஆகியோரைப் பற்றிய உவமையை நீங்கள் கண்ணோக்க முடியும், அல்லது மத்தேயு 23ல் இயேசுவின் புண்படுத்தும் கடிந்து கொள்ளுதலை நீங்கள் வாசிக்க முடியும். இருப்பினும் நீங்கள் மலைப்பிரசங்கத்தை விட்டு இன்னும் தூரமாகச் செல்வது அவசியமில்லை. அடுத்த அதிகாரத்தில் நீங்கள் "மாயக்காரரே" என்று வாசிக்கும் ஒவ்வொரு முறையும் (6:2, 5, 16), நீங்கள் "வேதபாரகர் பரிசேயர்" என்ற வார்த்தைகளைப் பதிலியாக அங்கு இடமுடியும் (மத்தேயு 23:13, 14, 15 ஆகிய வசனங்களை ஒப்பிடவும்).

மேலே கொடுக்கப்பட்ட மற்றும் பிற குறிப்புகளில் இருந்து நாம், வேதபாரகர் மற்றும் பரிசேயர்களின் பகுதியில் பல தவறுகளை நாம் பட்டியலிட முடியும். அவர்கள் ஒழுக்கரீதியாக நேராக இருத்தலைக் காட்டிலும் சடங்குகள் மற்றும் சடங்காச்சாரங்கள் பற்றி அதிக அக்கறை கொண்டிருந்தனர். அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதலைக் காட்டிலும் மனிதரால் ஏற்படுத்தப்பட்டிருந்த பாரம்பரியங்களைக் கடைப்பிடிப்பதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர் (காண்க மத்தேயு 15:3-6). அவர்கள் தேவனை மகிமைப்படுத்துவதற்கு மாறாகத் தங்களையே மகிமைப்படுத்தினர். அவர்கள் சுய திருப்தி உள்ளவர்களாக இருந்தனர். அவர்கள் மற்றவர்களைக் குறித்துச் சிறிதளவே அக்கறை உள்ளவர்களாக இருந்தனர்.

இருப்பினும், வேதபாரகரும் பரிசேயரும், உள்ளானவற்றைப் புறக்கணிக்கப் புறம்பானவற்றை வலியுறுத்தினர் என்பதே அவர்களின் இறுதியான தவறாக இருந்தது (காண்க மத்தேயு 23:25-28). லூக்கா 16:15ல் இயேசு அவர்களிடத்தில், "நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்; மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது" என்று கூறினார். மத்தேயு 5ன் கடைசிப் பகுதியில் உள்ள உதாரணங்களில், பாவத்தின் புறம்பான வெளிப்பாடு கண்டனம் பண்ணப்படுவதாக இருப்பது மாத்திரமின்றி, அந்த வெளிப்பாட்டிற்குப் பின்புலத்தில் உள்ள இருதயத்தின் எண்ணப்போக்கும் கண்டனம்பண்ணப்படுகிறது. இயேசு, கொலையை மாத்திரம் அல்ல, ஆனால் அதற்கு முன்னால் வருகிற கோபத்தையும் பழித்துரைத்தார் (மத்தேயு 5:21, 22). அவர், விபசாரம் தவறானதாக இருக்கிறது என்று மாத்திரம் கூறவில்லை, ஆனால் இச்சையே பாவம் நிறைந்ததாக உள்ளது என்றும் அறிவித்தார் (வசனங்கள் 27, 28).

மத்தேயு 5:20ஐப் பற்றிய இரு நிறைவுக் குறிப்புகள் முறையானவையாக உள்ளன. முதலாவது, 19ம் வசனத்தில் இயேசு, ஏற்கனவே இராஜ்*யத்தில் இருப்பவர்களைப்* பற்றிப் பேசினார் ("சிறியவர்" மற்றும் "பெரியவர்"), அதே வேளையில் 20ம் வசனத்தில் அவர், இராஜ்யத்தில் *பிரவேசித்தல்* பற்றிக் குறிப்பிட்டார். இராஜ்யத்தில் (சபையில்) பிரவேசிப்பதற்கு, நீங்கள் குறிப்பிட்ட சில புறம்பான வடிவமைப்புகளைக் கடைப்பிடித்தல் (நீங்கள் இயேசுவை விசுவாசிப்பதாக அறிக்கையிட்டு முழுக்காட்டப்படுதல்) மாத்திரம் போதுமானதல்ல. நீங்கள் "உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் *மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிய*" வேண்டும் (ரோமர் 6:17; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இரண்டாவதாக, யூதத்துவத்தில் மிகவும் செல்வாக்குள்ள மதக்குழுக்கள் - வேதபாரகர் பரிசேயர் - பற்றிய இயேசுவின் பாராட்டுதலுக்குக் குறைவான குறிப்புரையானது அந்த வல்லமை நிறைந்த தலைவர்களுடன் அவரது போராட்டங்களுக்கான மேடையை அமைத்தது. நடைமுறை நோக்கங்கள் யாவற்றிற்காகவும், இயேசு அந்தக் கூற்றை ஏற்படுத்தியபோது தமது மரண சாசனத்தில் கையெழுத்து இட்டார். மேம்போக்கான தேவபக்திக்கு எதிராக நம்மை இயேசு எச்சரிப்பதற்காகத் தமது உயிரையே இயேசு பணயமாக வைத்தார்.

## முடிவுரை

நமது படிப்பில் நாம், தேவனுடைய வசனத்தின் மீது இயேசு மிக உயர்வான மதிப்பைக் கொண்டிருந்தார் என்று கண்டிருக்கிறோம் மற்றும் நாமும்கூட, தேவன் வெளிப்படுத்தியுள்ள யாவற்றின் மீதும் மிகவும் ஆழ்ந்த மதிப்பைக் கொண்டிருக்க வேண்டும். இதை நான் முடிக்கையில், பொதுவாகப் பழைய ஏற்பாட்டைக் குறித்த நமது எண்ணப்போக்கு பற்றி ஒருசில கூடுதல் வார்த்தைகள் முறையானவையாக இருக்கலாம். சிலுவையில் இயேசு மரித்தபோது, பழைய ஏற்பாடு "நிறைவேற்றப்பட்ட" மற்றும் "முழுமை பெற்ற" உடன்படிக்கையாக ஆனதைக் கற்றறியும் சிலர், அது இனி தங்களுக்குத் தேவையில்லை என்று முடிவு செய்கின்றனர். அவர்கள் அதை வாசிப்பதோ அல்லது படிப்பதோ இல்லை. இருப்பினும் இயேசு, நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனமும் நிறைவேற்றப்படுவதற்குச் சற்றுக்காலம் முன்னதாகத் தான் மலைப்பிரசங்கத்தைப் பிரசங்கித்தார் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். விஷயம் இப்படித்தான் இருந்தது என்பதை அவர் அறிந்திருந்தார் என்பது நிச்சயம், ஆனால் அவர் பழைய ஏற்பாட்டின் மீதான தமது மதிப்பையோ அல்லது அன்பையோ குறைத்து விடவில்லை.

இரண்டு மிகைமுனைக் கருத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டும். ஒரு மிகைமுனைக் கருத்து, "பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையில் வேறுபாடு எதுவும் இல்லை. அவை இரண்டுமே சம அளவில் இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்துகின்றன" என்று கூறுகிறது. இன்னொரு மிகைமுனைக் கருத்து, "பழைய ஏற்பாடு இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்குக் கூற ஒன்றும் கொண்டிருப்பதில்லை. நாம் அதை ஒழித்து விடலாம்" என்று கூறுகிறது. பழைய ஏற்பாடு என்பது, தேவனுக்கும் யூதர்களுக்கும் இடையிலான பழைய உடன்படிக்கையின் இருதயம் போன்ற

மையப்பகுதியாக இருந்தது என்பது உண்மையே, ஆனால் அது அந்தப் பழைய ஏற்பாடு கிறிஸ்தவர்களுக்கு மதிப்பு எதையும் உடையதாக இருப்பதில்லை என்று அர்த்தப்படுவதில்லை (காண்க ரோமர் 15:4; 1 கொரிந்தியர் 10:11). மத்தேயு 5ஐ நாம் தொடர்ந்து படிக்கையில், இயேசு கூறியவற்றிற்கும் பழைய உடன்படிக்கைக்கும் இடையில் ஒரு நெருங்கிய உறவு இருப்பதைக் காண்போம். இயேசுவின் போதனைகளில் பல, பழைய ஏற்பாட்டுப் பின்னணியைக் கொண்டுள்ளன. அந்தப் பின்னணியைப் புரிந்துகொள்வதில் இருந்தே இயேசு கூறியவற்றை முழுமையாக மதிப்பதற்கான ஒரு திறவுகோலைக் கொண்டிருத்தல் அடிக்கடி வருகிறது.

முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்கள், இன்றைய நாட்களில் உள்ள சிலரைப் போன்று பழைய ஏற்பாட்டின் மீது வெறுப்புக் கொண்டிருக்கவில்லை. புதிய ஏற்பாடு வடிவமைக்கப்படும் வரையிலும் பல ஆண்டுகளாக, அவர்கள் பழைய ஏற்பாட்டு வேதவசனங்களையே தங்கள் ஒரே “வேதாகமமாக” கொண்டிருந்தனர். நீங்கள் புதிய ஏற்பாட்டை வாசித்திருந்தால், அதில் பழைய ஏற்பாடு எவ்வளவு அடிக்கடி மேற்கோள் காண்பிக்கப்படுகிறது என்பதைக் குறித்து நீங்கள் நிச்சயமாகவே மனம் ஈர்க்கப்படுவீர்கள். யாரோ ஒருவர், “பழைய ஏற்பாட்டில் புதிய ஏற்பாடு மறைந்துள்ளது, புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு வெளிப்படுத்தப்படுகிறது” என்று கூறியுள்ளார். புதிய ஏற்பாடு கர்த்தருடனான நமது உடன்படிக்கையின் நிபந்தனைகளை வெளிப்படுத்துவதால் அது பெரிதளவு வலியுறுத்தம் பெறவேண்டும். அதே வேளையில், பழைய ஏற்பாட்டை நாம் புறக்கணிக்காதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

---

குறிப்புகள்

[1]ஆங்கில இலக்கணத்தில் யாரேனும் ஒருவரைப் பற்றிப் பேசும்போது “படர்க்கைப் பெயர்ச்சொல்” பயன்படுத்தப்படுகிறது. யாரேனும் ஒருவரிடத்தில் பேசும்போது, “முன்னிலைப் பெயர்ச்சொல்” பயன்படுத்தப்படுகிறது. பேசுபவர் தம்மைத்தாமே குறிப்பிடும்போது “தன்மைப் பெயர்ச்சொல்” பயன்படுத்தப்படுகிறது. [2]“பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள் … நான் உங்களுக்குச் சொல் லுகிறேன்” என்ற (அல்லது அவற்றிற்கு இணையான) வார்த்தைகளை ஆறு முறைகள் இயேசு பயன்படுத்தினார். இருப்பினும், விவாகரத்து மீதான போதனை (வசனங்கள் 31, 32) விபசாரம் மீதான கலந்துரையாடலின் (வசனங்கள் 27-30) ஒரு பகுதியாக இருக்க நோக்கங்கொண்டிருந்தது, எனவே ஐந்து விவரிப்புகள் மாத்திரமே உள்ளன எனலாம். [3]“எழுத்துக்கள்” என்று அழைக்கப்பட்ட மூன்றாவது பிரிவு ஒன்றிருந்தது. சங்கீதங்களின் புத்தகம் என்பது எழுத்துக்கள் என்ற பிரிவில் மேலாதிக்கம் பெற்றிருந்ததால், இம்மூன்று பிரிவுகளும் சிலவேளைகளில், நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசிகளின் ஆகமங்கள் மற்றும் சங்கீதங்கள் என்று குறிப்பிடப்பட்டன (காண்க லூக்கா 24:44). [4]இவ்வார்த்தை *luo* (“to loose” அதாவது, “தளர்த்துதல்”) என்பதைக் கொண்டு உருவாக்கப் பட்டு *kata* (அதாவது “அதன்படி”) என்ற முன்னிடைச் சொல்லைக் கொண்டு பலப்படுத்தப்பட்டுள்ளது. [5]Walter Bauer, “A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,” fourth rev. and aug. ed. by William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: The University of Chicago Press, 1952), 415. [6]“அழித்து” என்பது *kataluo* என்ற வார்த்தையின் அர்த்தம் போன்ற அர்த்தம் போன்ற அர்த்தம் தருகிற *katargeo* என்ற வார்த்தையில் இருந்து

*வருகிறது.* [7]*"சட்டரீதியான நியாயப்பிரமாணங்கள் என்பது இஸ்ரவேல் மக்களை ஒரு நாட்டினம் என்ற வகையில் ஆளுவதற்காகத் தரப்பட்ட சட்டங்களைக் குறிக்கிறது.* [8]*மூன்று வகையான பிரிவு என்பது "அனேகமாக அக்வினாஸ் என்பவருக்கு முந்திய காலம் வரையில் இருப்பதில்லை"* (D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8 [Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1984], 143). *தாமஸ் அக்வினாஸ் என்பவர் கி.பி. 1225-1274 வரையில் வாழ்ந்த ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த ஒரு கல்வியாளராக இருந்தார்.* [9]Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* abr., ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, Abridged in One Volume (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 867. [10]Bauer, 677.

[11]*ரோமர் 7 மற்றும் பிற இடங்களில் பவுல், நியாயப்பிரமாணம் அந்த நோக்கத்தை நிறைவேற்றவில்லை என்பதைச் சுட்டிக்காண்பித்தார். நியாயப்பிரமாணம் அல்ல, ஆனால் மனிதகுலத்தில் நெறிபிறழ்ந்த தன்மையும் மாம்சத்தின் பெலவீனமுமே பிரச்சனையாக இருந்தன.* [12]R. T. France, *The Gospel According to Matthew,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Inter-Varsity Press, 1985), 115. [13]Ibid., 115 [14]KJV *வேதாகமத்தில் இது* "jot" *என்றுள்ளது.* [15]KJV *வேதாகமத்தில் இது* "tittle" *என்றுள்ளது.* "Tittle" *என்பது ஒரு இலத்தீன் சொற்றொடரில் இருந்து வந்துள்ளது. எழுத்தின் மிகச்சிறிய குறியை இயேசு குறிப்பிட்டார்.* [16]W. E. Vine, Merrill F. Unger, William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 635. *இது ஒரு* "e" *என்ற எழுத்தை ஒரு* "c" *என்ற எழுத்தில் இருந்து வேறுபடுத்தும் ஒரு சிறிய கோட்டுடன் ஒப்பிடலாம்.* [17]D. F. Hudson, *Teach Yourself New Testament Greek* (London: English Universities Press, 1967), 166. [18]*இயேசு நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் அழிக்க வந்திருந்தார் என்றால் அவர், தாமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவாக இருந்தார் என்பதற்கான மிகப்பலமான சாட்சியங்கள் சிலவற்றையும் அழித்திருப்பாரே.* [19]Harold Fowler, *Matthew 1,* Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1968), 247. [20]Robert H. Mounce, *Matthew*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 44.

[21]*"மீறி" மற்றும் "அழிக்கிறதற்கு" என்ற இரண்டு வார்த்தைகளுமே luo ("தளர்த்த") என்பதில் இருந்து வந்துள்ளது.* [22]*இயேசுவின் கட்டளை கீழ்ப்படியப்பட வேண்டும் என்று அவர் நோக்கங் கொண்டிருந்தார் (காண்க மத்தேயு 7:26, 27).* [23]Albert Barnes, *Notes on the New Testament: Matthew and Mark,* ed. Robert Frew (Grand Rapids, Mich.: Baker Book House, 1970), 51. [24]France, 116. [25]*இவ்விடத்தில் "நீதி" என்பது "சரியானதைச் செய்தல்" என்று அர்த்தப்படுகிறது. குறிப்பாக இவ்வார்த்தை நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதலைக் குறிப்பிடுகிறது.* [26]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 82. [27]*இவர்கள் முதலாம் நூற்றாண்டில் பலஸ்தீன நாட்டின் "வழக்கறிஞர்களாக" இருந்தனர் (மத்தேயு 22:35ஐ மாற்கு 12:28 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்).* [28]Vine, 470. [29]McGarvey, 53. [30]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 75.